# தூய லூர்து அன்னை திருப்பீடம்

தூய லூர்து அன்னை ஆலயம், 50 ஒ.்பியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி எண் 6294 0624

(முதல் ஆண்டு)

நாள் 20 - 08 - 2017 இதழ் 39

## திருப்பலி நேரங்கள்

**வாரநாட்களில் - ஆங்கிலம்**

திங்கள் முதல் வெள்ளி வரை மதியம் 12:30
மற்றும் மாலை 6:30மணி

**சனி** மாலை 6:00மணி
மற்றும் மாலை 7:30மணி

**ஞாயிறு (ஆங்)** காலை 7.30மணி,11.30மணி
மற்றும் மதியம் 1:00மணி

**ஞாயிறு (தமிழ்)** காலை 9:30மணி
மற்றும் மாலை 6:30மணி

**பொது விடுமுறை** காலை 9:00மணி (ஆங்)
காலை10:00மணி(தமிழ்)

**சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு**

ஆகியவை ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8:00 மணி முதல் 9:00 மணி வரை தமிழில் நமது ஆலயத்தில் நடைபெறுகிறது. செப உதவி தேவைப்படுவோர் கலந்து கொள்ளவும்.

## பொது காலம் 20ஆம் ஞாயிறு

**முதல் வாசகம் :** எசாயா : 56:1,6-7

**பதிலுரைப் பாடல் :**
திபா : 67:1-2.4.5,7

**பல்லவி :** கடவுளே! மக்களினத்தார் உம்மைப் புகழ்ந்து போற்றிடுவர்.

**இரண்டாம் வாசகம்:**
உரோ 11:13-15,29-32

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:**
“அல்லேலூயா, அல்லேலூயா!
இயேசு விண்ணரசு பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றினார்;
மக்களிடையே இருந்த நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார்.
அல்லேலூயா.”

**நற்செய்தி வாசகம்:** மத்தேயு 15:21-28

## வழிபாட்டு நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| விவிலியப் பகிர்வு | ஞாயிறு | காலை 11:30மணி | (தமிழ்) |
| செபமாலை, லூர்து மாதா நவநாள் | முதல் ஞாயிறு | காலை 8:30மணி | (தமிழ்) |
| மரியாயின் சேனை | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| குழந்தை இயேசு நவநாள் | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| இறை இரக்கச் செபம் | செவ்வாய் | மாலை 5:45மணி | (ஆங்) |
| குழந்தை இயேசு நவநாள் | வியாழன் | மாலை 5:45மணி | (ஆங்) |
| இறை இரக்கச் செபம் | வெள்ளி | மாலை 5:45மணி | (தமிழ்) |
| திருமணி ஆராதனை வழிபாடு தொடர்ந்து திருப்பலி | முதல் வெள்ளி | மாலை 6.30மணி | (ஆங்) |
| திருஇருதய நவநாள் செபம் & திருப்பலி (முதல் வெள்ளி தவிர) | வெள்ளி | மாலை 6:30மணி | (ஆங்) |
| புனித பியோ செபவழிபாடு | மா.தின் 23ம் நாள் | மாலை 8:30மணி | (தமிழ்) |
| சாட்சிய கூடார செபவழிபாடு | முதல் ஞாயிறு | மதியம் 2:00மணி | (தமிழ்) |

## இரண்டாவது காணிக்கை

கத்தோலிக்க அடித்தள அமைப்பின் GIFT (விசுவாசத்துடனும் நன்றியறிதலுடம் கொடுத்தல்) திட்டத்திற்கான உங்களது மாதாந்திரப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள இரண்டாம் காணிக்கை வசூலிக்கப்படும்.

## ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணி



தேதி : ஞாயிறு, 27-08-2017
நேரம் : மதியம் 2.30மணி

**ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம் பிற்பகல் 2.30 மணி முதல் 4.00 மணி வரை மூடப்பட்டிருக்கும்.**

நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த
தன்னார்வலர்களை அன்போடு அழைக்கின்றோம்.

## வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை ஆண்டுப் பெருவிழா - 2017

ஆண்டுதோறும் நமது தூய லூர்து அன்னை ஆலயத்தில் நடைபெறும் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் ஆண்டுப் பெருவிழா இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

10-09-2017, ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு பெருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சுரூபத் தேர்ப்பவனியும் நடைபெறும்.

**அனைவரும் வருக!**
**வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் ஆசீர் பெறுக!**

இன்றைய நவநாளை சிறப்பிப்போர்: புனித அன்னாள் ஆலயம்.
அடுத்தவார நவநாளை சிறப்பிப்போர்: புனித பிரான்சிஸ் அசிசி ஆலயம்.

**வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை திருவிழாவை சிறப்பாகக் கொண்டாட, தாராள உள்ளத்தோடு நன்கொடை கொடுத்து உதவ வேண்டுகின்றோம். உங்களின் நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் கொடுத்து உரிய ரசீதைப் பெற்றுக் கொள்ளவும்.**



**திருவிழா நாளன்று திருப்பலிக் கருத்துக்கள் எழுதி வாசிக்கப்படும்.**

# சிந்தனை

அன்புடையீர்,
இன்று ஆண்டின் பொதுக்காலம் 20ஆம் ஞாயிறு. இயேசுவில் நம்பிக்கைக் கொண்டு தடைகள் பல தாண்டி இன்றைய திருப்பலியில் கலந்து இறைவனின் அருளைப் பெற்றுச் செல்ல வந்துள்ள இறைகுலமே உங்களை அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

பாகுபாடுகளை மீறி, நன்மைகள் நடக்கும் என்பதை எடுத்துரைக்கும் இன்றைய திருப்பலி வாசகங்களில் நமக்குத் தரப்பட்டுள்ளது.. இறைவாக்கினர் எசாயா வழியாக இறைவன் சொல்வது கனவுலகே தவிர, நடைமுறை உலகல்ல. இன்றைய நற்செய்தியில் ஊரின் எல்லைப்பகுதியில், சமுதாயத்தின் விளிம்பில் வாழ்ந்து வந்த ஒரு கானானியப் பெண் நமக்கு நம்பிக்கைத் தருகிறார். நல்ல பல பாடங்களைச் சொல்லித் தருகிறார்.

கானானிய இனத்தைச் சார்ந்தவள், ஒரு பெண் என்று அடுக்கடுக்கான பல தடைகளைத் துணிவுடன் தாண்டி இந்தப் பெண் தன் மகளைக் குணமாக்க இயேசுவை அணுகி வருகிறார். இயேசுவின் கடினமான சொற்களையும் சரியான கண்ணோட்டத்துடன் புரிந்து கொண்டு அப்பெண் தன் விண்ணப்பத்தை மீண்டும் இயேசுவிடம் வைக்கிறார். தளராத, உறுதியான விசுவாசத்தின் ஓர் எடுத்துக்காட்டாக அந்தக் கானானியப் பெண் நமக்கு முன் உயர்த்தப்படுகிறார். “அம்மா, உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்” என்று இயேசு அவரை அனுப்பி வைக்கிறார்.

தடைகள் எல்லாம் தாண்டி, இறைவனின் கருணையும் உண்டு என்பதை ஆணித்தரமாக உணர்த்திய கானானியப் பெண்ணிடம் நாம் கண்ட மகத்தான அந்த நம்பிக்கை முழுமையாகப் பெற்றுக்கொள்ள இன்றைய திருப்பலியில் இயேசுவைப்போல் நாமும் தந்தையாம் இறைவனிடம் ஒருமனப்பட்டுச் செபிக்கவும், அவருக்காய் நாம் செய்யும் பணிகள் வெற்றிப் பெற இறையருள் வேண்டிடுவோம்.

புனித லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**

# சிங்கப்பூர் உயர் மறைமாவட்டம்
# தமிழ் திருப்பலி நடைபெறும் நேரங்களும் இடங்களும்

| | | |
|---|---|---|
| புனித லூர்து அன்னை ஆலயம்<br>50 ஓபியர் ரோடு | : | ஞாயிறு காலை 9.30<br>ஞாயிறு மாலை 6.30<br>பொது விடுமுறை நாட்கள் காலை 10.00 |
| உயிர்த்த ஆண்டவர் ஆலயம்<br>91 தோ பா யோ சென்ட்ரல் | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மதியம் 4.00 |
| புனித பிரான்சிஸ் அசிசி ஆலயம்<br>200 பூன் லே அவின்யூ | : | மாதத்தின் முதல் ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் ஐந்தாவது ஞாயிறு மாலை 7.30 |
| புனித அந்தோணியார் ஆலயம்<br>25 உட்லாண்ட்ஸ் அவின்யூ 1 | : | மாதத்தின் முதல் சனி மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது சனி மாலை 7.30 |
| நற்கருணை ஆலயம்<br>1, காமன்வெல்த் டிரைவ் | : | மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.00 |
| நட்சத்திர மாதா ஆலயம்<br>10, ஈசூன் 22வது தெரு | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 6.30<br>மாதத்தின் மூன்றாவது சனி மாலை 6.30 |
| கிறிஸ்து அரசர் ஆலயம்<br>2221, அங் மோ கியோ அவின்யூ 8 | : | மாதத்தின் நான்காவது ஞாயிறு மாலை 6.30 |
| சம்மனசுகளின் இராக்கினி ஆலயம்<br>5, புக்கிட் பாதோக் அவின்யூ 2 | : | மாதத்தின் நான்காவது சனி மாலை 8.00 |
| புனித அன்னாள் ஆலயம்<br>66, செங்காங் ஈஸ்ட் வே | : | மாதத்தின் முதல் ஞாயிறு மாலை 7.30 |


**அருள்தந்தையர்**

அருள்தந்தை மைக்கேல் சீத்தாராம் (frmichaelsitaram@gmail.com) - பங்குத்தந்தை
அருள்தந்தை தே. நித்திய சகாயராஜ் (nithiya@catholic.org.sg) - உதவிப் பங்குத்தந்தை
அருள்தந்தை பால் இயோ (fryeopaul@gmail.com) - உதவிப் பங்குத்தந்தை

**பங்கு அலுவலகம்**

(ololpastoral@gmail.com மற்றும் ololsec@gmail.com )

இணையதள முகவரி: http://www.tamilcatholic.org.sg; http://facebook.com/ChurchOfOurLadyOfLourdesSingapore


அன்புப் பங்குமக்களே! தாங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே உங்கள் கைத் தொலைபேசியை அணைத்து வைக்குமாறும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.